2.3 கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு சொல்லுக்கும் பொருத்தமான எதிர்க்கருத்துச் சொல்லைத் தெரிந்து கோடிடுவோம்.

i. மகிழ்ச்சி (சந்தோசம் / கவலை / குதூகலம் / களிப்பு)

ii. அகம் (புறம் / இல்லம் / வீடு / மனை)

iii. கோபம் (சினம் / சீற்றம் / சாந்தம் / ஆத்திரம்)

iv. காடு (கானகம் / நாடு / வனம் / அடவி)

v. உண்மை (மெய் / வாய்மை / பொய் / சத்தியம்)

2.4 பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து இடைவெளி நிரப்புவோம்.

i. மயில் _____ இனத்தைச் சேர்ந்தது.
கப்பல்கள் _____ யில் பயணம் செல்லும்.

ii. கடிதம் _____ யில் இருந்தது.
ஆசிரியர் நிகழ்த்திய _____ அனைவரையும் கவர்ந்தது.

iii. அம்மா சுவையான _____ சமைத்தார்.
யானையின் மறு பெயர் _____ ஆகும்.

iv. குதிரையின் வேறு பெயர் _____ ஆகும்.
வரதன் மரத்தில் ஏறிப் பழம் _____.

v. உதயா பந்தை மேலே _____.
மேரி அடுப்பை நன்கு _____.

LIVEWORKSHEETS